Machine minder - Varatharajah. Security - R. Jesuthasan

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6:00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 மாசி 14 திங்கட்கிழமை (26-02-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 92

# கிண்ணியடி முகாமின் மீது புலிகள் மீண்டும் தாக்குதல்!

## அதே சமயத்தில் கிரானிலும் அதிரடி

சாவகச்சேரி, பெப்ரவரி 26

மட்டக்களப்பு மாவட்டம் கிண்ணியடியில் உள்ள ஸ்ரீலங்கா இராணுவமுகாம் மூன்று நாட்களில் இரண்டாவது தடவையாக நேற்று முன்தினம் நள்ளிரவு விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானது; அதே வேளை கிரானில் உள்ள இராணுவ முகாம் மீதும் புலிகள் தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர்.

சனிக்கிழமை நள்ளிரவு 11-00 மணியளவில் — ஏக காலத்தில் — இந்த இரண்டு முகாம் மீதும் மோட்டார் குண்டு மற்றும் சிறிய ரக ஆயுதங்கள் மூலம் புலிகளி ந் அணிகள் தாக்குதல் நடத்திய தாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியாவுக்கு அப்பால்

## பயணிகள் அனுமதி முறை: அரச அதிபர் விளக்கம்

கொழும்பு, பெப். 26

வடபகுதிப் பயணிகள் வவுனியாவுக்கு அப்பால் செல்வது தொடர்பாக வவுனியாவில் படையினரால் விதிக்கப்பட்டிருக்கும் கெடுபிடி நடவடிக்கைகள் குறித்து வன்னி மாவட்ட அத்தியாவசிய சேவைகள் இணைப்பதிகாரியும், வவுனியா அரச அதிபருமான திரு. கே. கணேஷ் விளக்கமளித்திருக்கிறார்.

அவர் கூறியதாவது:-

சைக்கிள் வியாபாரிகள் உட்பட வடக்கில் இருந்து வரும் அறுநூறு பயணிகள் தினமும் வவுனியாவுக்குள் அனுமதிக்கப்படுகின்றனர்.

தேசிய அடையாள அட்டை வைத்திருப்போர் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என்பதால் மாற்று ஏற்பாடுகள் செய்யப்படும்வரை நொச்சி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகளுக்கான அனுமதி: பொலீஸாரே வழங்குவர்!

கொழும்பு, பெப். 26

வடபகுதி பயணிகள் வவுனியாவுக்கு அப்பால் செல்வதற்கான அனுமதி வழங்கும் பொறுப்பு இராணுவ அதிகாரிகளிடமிருந்து இன்று முதல் பொலீஸ் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவிருக்கின்றது.

வவுனியா அரச அதிபர் இத்தகவலை வெளியிட்டார்.

வவுனியா ரயில் நிலையம் வரை பயணிகள் வருவதற்கு இதுவரை இருந்த நடைமுறையே தொடர்ந்தும் பொதுவாகப் பேணப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

(உ-3)

### எழுதுவினைஞர் நேர்முகப்பரீட்சை:

## பரீட்சார்த்திகள் வவுனியா வருவதற்கு விசேட வசதி

வவுனியா, பெப். 26

வவுனியா செயலகத்தில் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறும் — எழுதுவினைஞர் பதவிக்கான — நேர்முகப் பரீட்சைக்காக கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் பகுதிகளில் இருந்து வரும் பரீட்சார்த்திகளுக்கு வவுனியா தாண்டிக்குளம் தடை முகாமில் விசேட வசதி செய்யப்பட்டுள்ளதாக வவுனியா அரச அதிபர் தெரிவித்தார்.

இந்த நேர்முகப் பரீட்சையில் தோற்றுவதற்காக அந்தப்பகுதிகளில் இருந்து வருவோரின் பெயர் விவரங்கள் இராணுவ, பொலீஸ் அதிகாரிகளிடம் வழங்கப்பட்டுள்ளதாகவும் —

தாண்டிக்குளம் தடைமுகாமில் அவர்கள் எதுவித பிரச்சினையும் இன்றி வரலாம் என்றும் — அவர் தெரிவித்தார்.

(உ-3)

## பென்ஷன் வவுச்சர்கள் வந்தன

வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகளுடன் நேற்று பருத்தித்துறைக்கு வந்த ''ஹபரண'' கப்பலில் ஒருதொகுதி பென்ஷன் வவுச்சர்களும் எடுத்து வரப்பட்டுள்ளன.

இக்கப்பல் இன்று திருமலைக்குப் புறப்பட்டுச் செல்லும்.

(உ-173)

## காயப்பட்ட இருவர் மரணம்

கிண்ணியடி முகாமில் இருந்து கடந்த வியாழக்கிழமை படையினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் காயமடைந்திருந்த எட்டுப் பொதுமக்களில் இருவர் நேற்று உயிரிழந்தனர்.

க. சீதை (55 வயது), க. மாணிக்கம் (48 வயது) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்கள் ஆவர்.

மேலும் நால்வரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## மீனவர் காயம்

தென்மராட்சி, பெப். 26

நேற்றிரவு 6.30 மணிக்கு தனங்கிளப்புக் கடல் பகுதியிலிருந்து கடற்தொழிலுக்குச் சென்ற ஆறு மீனவர்களில் ஒருவர் கடற் படையினரின் சூட்டுக்கு இலக்காகி வலது காலில் படுகாயமடைந்தார்.

குருநகரிலிருந்து இடம்பெயர்ந்து தனங்கிளப்பு பிள்ளையார் கோவிலடியில் வசித்து வந்த புஷ்பராஜா எட்வின் (வயது 26) என்பவரேபடுகாயமுற்றவராவார்.

இவர் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(உ-117)

## வடக்கிற்கு இலவச பாட நூல்

யாழ். மாவட்டத்துக்கான புதிய இலவசப் பாடப் புத்தகங்களைக் கப்பல் மூலம் எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப்புதிய பாடப் புத்தகங்கள் வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும்.

அதன் பின்னர் வடமராட்சி, தென்மராட்சிப்பகுதி மாணவர்களுக்கு புதிய பாட நூல்கள் வழங்கப்படும். இவர்களுக்கு கையிருப்பில் உள்ள பாவித்த பாடநூல்களை வழங்கி அவை போதாமல் போகும் பட்சத்தில் புதிய புத்தகங்கள் வழங்கப்படும்.

யாழ். மாவட்டத்துக்குரிய புதிய பாடநூல்கள் இங்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பெண்கள் கைது

அம்பாறையில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த இரு தமிழ்ப் பெண்கள் சோதனை முகாமில் வைத்து அண்மையில் பொலிஸாரால் கைதாகினர்.

அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர்களான எஸ். கமலாவதி (28 வயது), நாகமணி அருணாசலம் ஆகிய இருவருமே கைதானவர்களாவர்.

## கிளைமோர் தாக்குதலில் சிப்பாய் உயிரிழப்பு!

### புலிபாய்ந்தகல்லில் சம்பவம்

சாவகச்சேரி, பெப். 26

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய கிளைமோர் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்; மற்றொருவர் காயமடைந்தார்

நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு புலிபாய்ந்தகல், கிரான் இராணுவ முகாம்களில் இருந்து வீதித் தடைகளை அகற்ற வந்த வேலையில் இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் கிளைமோர் தாக்குதலுக்கு இலக்கானதாக அறிவிக்கப்பட்டது.

(உ-3)

## மலேஷியா, ஜப்பான் நாட்டு தூதரகங்கள் தாக்கப்படும்!

### எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாம்

மலேஷியா, ஜப்பான் நாடுகள் கொழும்பு அரசுக்கு ஆதரவு அளிப்பதால் கொழும்பில் உள்ள அந்த நாட்டுத் தூதரகங்களைத் தாக்கப் போவதாக விடுதலைப்புலிகள் மிரட்டியுள்ளனர்.

''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகை இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கிறது.

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என மலேஷிய அரசு அறிவித்துள்ளதாலும் —

அரசு சார்பு தமிழ் அரசியல் வாதிகளுக்கு ஜப்பான் விஸா வழங்குவதாலும் —

அந்தநாட்டு தூதரகங்களுக்கு மிரட்டல் விடுக்கப்பட்டதாக பொலீஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். இதனால் இரு தூதரகங்களுக்கும் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

— இவ்வாறு ''சண்டே ரைம்ஸ்'' மேலும் தெரிவித்தது.

(உ-3)

### கடல் நீரின் கீழ் உலவும்

## கலங்களைக் கண்டுபிடிக்க புதிய பாதுகாப்பு முறை

சாவகச்சேரி, பெப். 26

ஸ்ரீலங்கா தீவைச் சூழவுள்ள பகுதிக் கடலில் புதிய முறையிலான பாதுகாப்பு கண்காணிப்பு நடைமுறையைக் கடற்படை மேற்கொள்ள விருப்பதாக அறியவருகின்றது.

கடல் நீரின் கீழ் உலவும் கலங்களை இனம் காணக்கூடியதான சாதனங்கள் மூலம் இந்தப் புதிய பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

(உ-3)

### இன்று நடைபெறும்

## நோர்வே மாநாடு குறித்து அதிகளவில் எதிர்பார்ப்பு

இலங்கையின் இனப்பிரச்சினை சம்பந்தமாக இன்று நோர்வேயின் பேர்ஜன் நகரில் நடைபெறவுள்ள கருத்தரங்கு —

அனைத்துலக ரீதியில் பெரும் ஆர்வத்தையும் எதிர்பார்ப்பையும் தோற்றுவித்திருப்பதாக — கருத்தரங்கை ஏற்பாடு செய்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கருத்தரங்கை ஒரு சமரச முயற்சியாகக் கருதும் அளவுக்குப் பலதரப்பினரும் கொள்வதாகவும் —

இதில் இத்துணை பேரார்வம் காட்டப்படும் எனத் தாம் நினைத்திருக்கவில்லை என்றும் — கருத்தரங்கின் ஏற்பாட்டாளர்களான நோர்வேயின் சி. எம். ஐ. நிறுவனப் பேச்சாளர்கள் தெரிவித்தனர்.

இலங்கைப் பிரச்சினைக்கான சமரச முயற்சிக்குரிய உச்சி மாநாட்டுக்கான முன்னோடி ஏற்பாடாகக்கூட இந்தக் கருத்தரங்கினைச் சில அவதானிகள் நோக்குவதாக பி. பி, ஸி. தெரிவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கட்டில் [ஒற்றை], Ceyesta மெத்தை, சுவர்மணிக்கூடுகள், Oven, கமரா, மைக்ரோ கசட் றெக்கோடர் (Sony), Sumit Liguidizer, Lumala பெண்களுக்கான சைக்கிள், கறுப்பு வெள்ளை T. V., டைப்ரைட்டர்கள் (ஆங்கிலம்), ஸ்டீரியோ கசட் றெக்கோடர் ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆ. நாகேந்திரன், கந்தசுவாமி கோவிலடி, கெருடாவில், சாவகச்சேரி. (40839)

போட்டஸ்ரற் பிரதி இயந்திரம் கனொன் (3225) விற்பனைக்குண்டு. S. கண்ணுத்துரை, கிராமசேவகர் காரியாலயம் முன்பாக, ஜெகதீசராசன் வீதி, கரவெட்டி வடக்கு. (தபால் நிலையம் அருகாமையில்) (40829)

### உடன் விற்பனைக்கு

திருச்சி மிருதங்கம், கசியோ S-A-21 ஓகன், லேடீஸ் லுமாலா சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- ஆ. சிவராஜா, இல. 34, கண்டி வீதி, பழைய பொலீஸ் நிலையம் அருகாமை, சாவகச்சேரி, (40865)

நல்ல நிலையிலுள்ள, புடைவைக் கடைகளுக்கு ஏற்ற கண்ணாடி அலுமாரிகள் நான்கு விற்பனைக்குண்டு. தொடர்பு: சிவா அச்சகம், கைதடி. (40698)

### வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி, நுணாவில் கிழக்கு, சோதிநாதர் வீதியில் 3½ பரப்புள்ள காணியும், 2 வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: மரகதம். (40863)

### தேவை

தனிநபர் ஒருவரை வெளிநாடு செல்லும் வரை பராமரிக்கக் கூடிய கௌரவமான குடும்பம் ஒன்று தேவை. எதிர்பார்க்கும் வசதிகளைக் குறித்து விவரமாக விண்ணப்பிக்கவும். இல. 535 C/o உதயன், சரசாலை தெற்கு. (40825)

### L. M. L. பஜாஜ் உதிரிகள்

பழைய, புதிய வெஸ்பா பஜாஜ் உதிரிகளைப் பெற்றுக்கொள்ளவும், அவற்றைத் திருத்திக்கொள்ளவும் ஷண் மோட்டோஸ், ஹப்பி துணியகம் அருகாமையில், யாழ். வீதி, கிளிநொச்சி, (மானிப்பாய் வீதி - பாபு) கிளை: கண்டி வீதி, மீசாலை. (சி-4067)

### தவறிவிட்டது

23 - 2 - 96 அன்று பருத்தித்துறை ஆனைவிழுந்தான் சந்திக்கும், தும்பளைச் சந்திக்குமிடையில் ஹொண்டா லீட் மோட்டார் சைக்கிள் சைட் கவர் (நீலநிறம்) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தகவல் தரவும். Aid Lines பரிசோதனை நிலையம், பருத்தித்துறை வீதி, மந்திகை. சன்மானம் தரப்படும். (சி-4069)

### மணப்பெண்கள் தேவை

வயது 48, 46 பட்டதாரி மாதம் 5000/-க்கு மேல் வருமானமுள்ள, களஸ்திரதோஷமும் உள்ள பிரம்மச்சாரிகளுக்கு வெளிநாடு வரக்கூடிய கல்வி அல்லது தொழிலுள்ள மணப்பெண்கள் தேவை. ஜாதகம் பொருந்தினால் மற்றவை தடையில்லை. 28-2-96க்கு முன்னர் விண்ணப்பிக்கவும் இல. 536, C/o உதயன், சரசாலை தெற்கு. ]40826]

### சோதிடம்

உங்கள் கல்வி, உத்தியோகம், தொழில், விவாகம் பற்றிய பலன்களை அறிந்திட இன்றே நாடுங்கள்: த. சிவானந்தன், பிரபல சோதிடர், ஆனந்தா சோதிட நிலையம், கண்டி வீதி, சாவகச்சேரி (அரசினர் வைத்தியசாலை முன்பாக). (40861)

## 6 மீனவரை காணோம்

கடந்த புதன்கிழமை பேசாலை — வங்காலைக் கடலில் மூன்று படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற ஆறு மீனவர்கள் இன்னும் திரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக தலைமன்னார் கடற்படையினரிடம் உறவினர்கள் முறையிட்டுள்ளனர் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

## இடமாற்றம்

தமிழீழ சுகாதார சேவைகள் பணிமனை விநாசித்தம்பி வீதி, (வைத்தியசாலை முன்பாக) சாவகச்சேரி என்ற முகவரியில் 25-02-1996 இல் இருந்து பணிகளை மேற்கொள்கிறது என்பதை பொதுமக்களின் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

பொறுப்பாளர்,
தமிழீழ சுகாதார சேவைகள்.

(C/4072)

## உடன் சந்திக்கவும்

இலக்கம் 16, புதுவீதி, அத்தியடி, யாழ்ப்பாணத்தில் வசித்த தம்பிஐயா கைலாயபிள்ளை அவர்களை கரவெட்டியில் வசிக்கும் கணபதிப்பிள்ளை வீரசிங்கம் (சாந்தி சினிமா - யாழ்,) உடன் சந்திக்கும்படி கேட்டுக் கொள்கின்றார்.

விலாசம்:
க. வீரசிங்கம்,
இராமு கடையடி,
புதுத்தோட்டம், நெல்லியடி,
கரவெட்டி.

(நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுசங்க ஒழுங்கை)
(40840)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## FACULTY OF MEDICINE/ DEPARTMENT OF SIDDHA MEDICINE

### COMMENCEMENT OF THE ACADEMIC PROGRAMMES AND EXAMINATIONS

FACULTY OF MEDICINE

Academic Programmes

Pre - Clinical Teaching will commence on 18-03-1996 at Siddha Medicine, Kaithadi.

Para - Clinical and Clinical Teaching for the 1989, 1990 and 1991 batches will commence on 01-04-1996 at Manthikai Hospital.

Examinations

3rd MBBS Part I Examniation (1990 batch) will commence on 22-04-1996.

2nd MBBS (2nd exam) (1992 batch) will commence on 29-04-1996

The above examinations will be held at the Department of Siddha Medicine, Kaithadi. Those who are eligible to sit for the above examinations are requested to submit their applications on or before 31-03-1996 at one of the following places giving their names, registration numbers and the subjects for which they are appearing:

1. Department of Siddha Medicine, Kaithadi.
2. Faculty of Agriculture, University of Jaffna, Kilinochchi.

Repeat students should pay Rs 50/- for each subject at the above Offices.

DEPARTMENT OF SIDDHA MEDICINE

First, Second, Third & Fourth BSMS Examinations

The above examinations are scheduled to commence on 27-03-1996 at the Department of Siddha Medicine, Kaithadi. Students who wish to appear for the above examinations, are kindly requested to submit their applications on or before 15-03-1996 either at the Department of Siddha Medicine, Kaithadi or at the Office of the Faculty of Agriculture, Kilinochchi, giving their names, registration numbers and the title of the snbject for which they wish to appear.

Repeat students should pay Rs. 50/- for each Subject at the above Offices.

REGISTRAR
University of Jaffna
23-02-1996

(C/2980)

## நிதித்துறை அறிவித்தல் வைப்பகத்திற்கு வருக

கீழ்க்குறிப்பிடுவோரை முதன்மைச்சாலை நெல்லியடியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு நாளை 27-2'96ஆம் திகதி காலை 10-00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை கேட்டுள்ளது.

★ முருகேசு யோகநாதன் — செட்டித்தெரு, பருத்தித்துறை.

★ இராஜரட்ணம் இரட்ணவேனு அல்லது பரமேஸ்வரி இரட்ணவேனு — மே/பா வி. மகேஸ்வரன் திடல்வளவு, நவிண்டில், கரவெட்டி.

★ இராமசாமி நாராயணசாமி — காட்டுப்புலம், தொண்டமானாறு.

★ கணபதிப்பிள்ளை சின்னப்பிள்ளை — நாவலடி ஒழுங்கை, புலோலி மேற்கு, பருத்தித்துறை.

★ ரெட்ணம் இந்திரதாஸ் — மே/பா கே. சந்திரன், 90, அரசடி லேன், புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

★ அம்பலவாணர் குமாரவேலு — அத்துலு அம்மன் கோவிலடி, கரவெட்டி கிழக்கு.

★ சரஸ்வதி சிவகுருநாதன் தாமரைக்குளத்தடி வடக்கு, புலோலி, பருத்தித்துறை

★ தம்பையா அரியரட்ணம்—வியாபாரிமூலை, பருத்தித்துறை.

★ நாகப்பர் நல்லையா — மாலாவத்தை, புலோலி தெற்கு.

★ சின்னத்தம்பி தங்கப்பிள்ளை — மே/பா கருணமணி, ''மணிவாசா'' புலோலி, தெற்கு

★ பிறேமா நடராஜா அல்லது S, சுந்தரமூர்த்தி — மே/பா பி. அம்பலவாணபிள்ளை, ராதா வீடு, நெல்லந்தை றோட், தும்பளை, பருத்தித்துறை.

★ பத்மராணி ஜெயநாதன்—மே/பா ரெட்ணசிங்கம் ''கொழுந்து வாசம்'' துன்னாலை தெற்கு, கரவெட்டி.

★ மயில்வாகனம் பாலசுப்பிரமணியம் — ''பாக்கிய வாசா'', செட்டித்தெரு, பருத்தித்துறை.

★ நடராசா வரதலிங்கம் — தக்கலாய வீதி, நெல்லண்டை, பருத்தித்துறை.

★ கந்தன் சின்னத்துரை — வல்லிபுரக்குறிச்சி, புலோலி தெற்கு, பருத்தித்துறை

★ இராமலிங்கம் சிவராசா — இலக்கணாவத்தை, தேவன் குறிச்சி, சமரபாகு, உடுப்பிட்டி.

★ மயில்வாகனம் குமாரசாமி — முதலியார் வளவு, இமையாணன், உடுப்பிட்டி.

★ கனகசபை பொன்னுத்துரை — நாவலர்மடம், நவிண்டில், கரவெட்டி.

★ ஈஸ்வரி செல்வராஜா—மே/பா. கணபதிப்பிள்ளை இராசையா, ஐயனார் வீதி, பருத்தித்துறை

★ தம்பையாபிள்ளை பரமகுருநாதன் — வியாபாரி மூலை, புலோலி மேற்கு, பருத்தித்துறை.

★ குமாரசிங்கம் நல்லைநாதன் — மே/பா. பி. சிவகுமாரன் ''பத்மவாசா'', கந்த உடையார் ஒழுங்கை, பருத்தித்துறை.

★ செல்லையா சந்திரகுமார் — மே/பா. வி. வடிவேலு, தெனியம்மன் வீதி, வண்ணாந்துறை, புலோலி மேற்கு, பருத்தித்துறை.

★ இராசப்பு ஜேசுதாசன் — மே/பா. என். பாக்கியநாதன், காரையடி, புலோலி தெற்கு, பருத்தித்துறை.

★ இஸ்தாக்கி கிளமெண்ட் - சென்தோமஸ் றோட், பீச்றோட், பருத்தித்துறை.

★ மகேஸ்வரி செல்லப்போடி — பிள்ளையார் கோவிலடி, வல்வெட்டித்துறை.

★ சின்னப்பு வேலாயுதம் — சிவமகள், வல்வெட்டித்துறை.

★ எஸ்.சந்தான் சியாமா—வெளிச்சவீட்டு ஒழுங்கை, பருத்தித்துறை.

★ ஆறுமுகம் செல்வநாயகம் — மே/பா. பொன்னையா, தம்பசிட்டி, புலோலி மேற்கு, பருத்தித்துறை.

★ கந்தசாமி ரவீந்திரன் — மே/பா வி. ஞானவேலாயுதம், பழைய உடையார் ஒழுங்கை, பருத்தித்துறை.

★ சிவநாதன் — மே/பா விநாயகமூர்த்தி ஆசிரியர், வீரபத்திராஜன், கரணவாய் தெற்கு, கரவெட்டி.

★ நாகலிங்கம் சிவசுப்பிரமணியம் — பத்திரகாளி கோவில், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

★ சரஸ்வதி கந்தசாமி — சமரபாகு, இலக்கணாவத்தை, உடுப்பிட்டி.

★ விஜயராணி செல்லையா — கரணவாய் மத்தி, கரவெட்டி.

★ யோகராணி மரியதாஸ் — மே/பா ம. செல்வநாயகம், நிலாவில், அல்வாய், பருத்தித்துறை.

★ கொலஸ்ரிகா தேவராஜா — மே/பா றறோறா, காற்கரை வீதி, கோரியடி, பருத்தித்துறை.

★ தங்கமலர் ஜெயராசசிங்கம் (பாலாம்மா) — மே/பா எஸ். செல்வஸ்ரார், மரக்காலை, நெல்லியடி, கரவெட்டி.

★ ஆறுமுகஐயர் சிவசண்முகஐயர்—செல்வச்சந்நிதி, தொண்டமானாறு.

★ சிங்காரம்பிள்ளை தேவராசா — விதானையார் வளவு, தொண்டமானாறு.

★ மி. கந்தையா—மே/பா சி. சிவநாதன், ''பொன்னைல்லா'', இமையாணன், உடுப்பிட்டி.

★ புஸ்பராணி கணபதிப்பிள்ளை — மே/பா பெ. வேலும் மயிலும், தரக்கம்பற்றை, புலோலி தெற்கு.

★ செல்வநாயகம் முரளிதரன்—மே/பா இ. தர்மலிங்கம், 16 ஆம் கட்டை, கரணவாய் தெற்கு, கரவெட்டி.

★ பொன்னுத்துரை சடாச்சரசோதி — மே/பா, பரமேஸ்வரன், 'சிவராசா பவனம்' துன்னாலை கிழக்கு, கரவெட்டி.

★ அருள்சோதி டெனீஸ்—தேவரையாளி பாடசாலை, வதிரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## முயற்சி வீண்!

இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்குடன் முன் வைக்கப்படும் எந்தத் தீர்வும் தமிழ் மக்களின் இன்னல்களைக் களைவதாக அமைய வேண்டும் —

அரசாங்கம் முன் வைத்துள்ள அதிகாரப் பரவல் திட்டம் துணிகரமான நடவடிக்கை. தனிப்பட்ட முறையில் நான் இதனைப் பெரு முயற்சியாகவே கருதுகிறேன் —

எனினும் பல்லின மக்கள் வாழும் நாட்டில், இப்போதுள்ள பின்னணியில் இது மட்டும்தான் பொருத்தமான தீர்வு என்று சொல்ல முடியாது —

கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதுவர் திரு. ஜேன் பீல்ட், ஸ்ரீலங்கா அரசின் ஊதுகுழலான ரூபவாஹினி தொலைக்காட்சிக்கு அளித்த செவ்வி ஒன்றில் இவ்வாறாகக் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

தாம் முன்வைத்துள்ள அதிகாரப் பரவல் திட்டம் பிரமாதமானது; இனப்பிரச்சினை நோயைத் தீர்க்கவல்ல அதிசக்தி வாய்ந்த நவீன மருந்து; என்று வெளிநாடுகளுக்குக் காண்பிக்கவும் அவற்றை நம்ப வைக்கவும் சந்திரிகா அரசு பெருமுயற்சி எடுத்து வருகிறது.

அதற்குத் தேவையான பிரசாரத் தந்திரங்களையும், நுணுக்கங்களையும் கச்சிதமாகக் கையாண்டு வருகிறது. பிறநாடுகளில் ஆதரவு திரட்டி வருகிறது.

அந்தவரிசையில் கொழும்பில் உள்ள பிரிஷ்டிஷ் தூதுவரிடமிருந்து ஆதரவான கருத்தைப் பெற்று அதனைச் சர்வதேச ரீதியாக பிரசாரப்படுத்தி வெளிஉலகத்தை நம்பவைக்கும் உத்தியாகவே அரசு இந்தச் செவ்வியைப் பயன்படுத்த முனைந்தது எனலாம்.

ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இந்த முயற்சி பிள்ளையார் பிடிக்கப் போய் பெருங்குரங்காய் ஆன கதை போலாயிற்று. தேவையின்றிப் பொல்லைக் கொடுத்து அடி வாங்கின நிலையுமாயிற்று!

அரசாங்கம்சமர்ப்பித்துள்ள அதிகாரப் பரவல் திட்டம் தமிழர்களின் இன்னல்களைத் தீர்க்கப்போதுமானது அல்ல. இலங்கையின் இன்றைய நிலையில் பொருத்தமான தீர்வும் அல்ல —என்பதனையே திரு ஜோன். பீல்டின் கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன.

அதுவே உண்மையுமாகும். தமிழர்களின் வாழ்வு இப்போதைய இன்னல் நிறைந்த தன்மையிலிருந்து சுமுக நிலைக்கு, இயல்பு நிலைக்கு மாறவேண்டும். அத்தகைய ஒரு மாற்றம் நிகழ்வதற்குதமிழர்களின் கைகளுக்கு ஆட்சி அதிகாரம் வர வேண்டும்.

அதிகாரப் பரவல் வேறு; ஆட்சி அதிகாரமும் உரிமையும் வேறு. தமிழர்கள் போராடுவது, அதிகாரப் பரவல் கேட்டல்ல. ஆண்டாண்டு காலமாகத் தாம் அனுபவித்த தன்னாட்சி உரிமையைப் பெறவே அவர்கள் போராடுகிறார்கள், அதனையே கேட்கிறார்கள்.

இதனை நன்றாகத் தெரிந்து கொண்டு சந்திரிகா அரசு யானைப் பசிக்கு சோளப் பொரி போட நினைப்பது ஏமாற்றுத்தனமே அன்றி வேறல்ல, அந்த ஏமாற்றுத்தனத்தில் வெளிநாடுகளையும் சேர்த்து விளையாட நினைப்பது வெற்றி தரமாட்டாது. சர்வதேச நாடுகளை ஏமாற்ற முடியாது. அதற்கான முயற்சி வீண் உழைப்பு என்பதனை ஜோன் பீல்ட்டின் செவ்வி மூலம் அரசு உணரட்டும்.

## கரிகாலனின் சகோதரருக்கு நஷ்டஈட்டுடன் வேலை

கொழும்பு, பெப் 26

விடுதலைப்புலிகளின் அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் எஸ். கரிகாலனின் அண்ணன் என்ற காரணத்தால் தொழில் மறுக்கப்பட்ட களுவாஞ்சிக் குடியைச் சேர்ந்த சிவஞானம் சற்குணநாதன் என்பவருக்கு பழைய சம்பளப்பாக்கியுடன் (1-4-96 தொடக்கம்) மீண்டும் வேலை வழங்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவை நீதியரசர்கள் மார்க் பெர்னான்டோ வடுகொடப்பிட்டிய, தீரரட்ன ஆகியோர் அண்மையில் பிறப்பித்தனர்,

சிவஞானம் சற்குணநாதனுக்கு எந்த இடத்தில் வேலை வழங்குவது என்பதை திணைக்களம் முடிவு செய்யலாம் என்றும் —

அவர் நஷ்டஈடு செலவுத் தொகை பெற உரித்துடையவர் என்றும் — நீதியரசர்கள் தமது உத்தரவில் தெரிவித்தனர்.

நஷ்டஈடு வழங்குவதோடு மீண்டும் வேலை வழங்க உத்தரவிடுமாறு கோரி மனித உரிமை மீறல் வழக்கை அவர் தொடர்ந்திருந்தார்.

தொலைத் தொடர்பு இயக்குநர், தபால் தொலைத் தொடர்பு செயலாளர், பிராந்திய தொலைத் தொடர்பு பொறியியலாளர், சட்டமா அதிபர் ஆகியோருக்கு எதிராக இவ்வழக்கு தொடரப்பட்டிருந்தது.

தொலைத் தொடர்பு திணைக்களத்தில் இவர் எழுதுவினைஞராகப் பணியற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## மலையக இளைஞர் ஆயுதம் ஏந்தும் நிலை!

சாவகச்சேரி, பெப். 26

''மலையகத்தில் தொடரும் அமைதியின்மை காரணமாக மலையக இளைஞர்கள் ஆயுதம் ஏந்தும் நிலை உருவாகிறது''.

இப்படி சிங்கள கிறிஸ்தவ மதகுரு ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 6 ஆம் திகதி முதல் மூன்று நாள்கள் கண்டியில் நடந்த ''செடக்'' அமைப்பின் வருடாந்த மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மலையகத்தில் இடம்பெறும் கைதுகள், சுற்றிவளைப்புகள், தேடுதல்கள் காரணமாக மலையக மக்களிடையே ஓர் இனம் புரியாத பதற்ற நிலையும், அமைதியின்மையும் ஏற்பட்டுள்ளன.

இந்நிலை தொடருமானால் மலையகத்தில் உள்ள இளம் சமுதாயம் ஆயுதம் ஏந்துவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

இப்படி அந்த சிங்கள கிறிஸ்தவ மதகுரு தெரிவித்தார்.

மலையகத்தில் ஏற்பட்டுள்ள பதற்றத்தையும், அமைதியின்மையையும் நீக்க செய்ய வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இம்மாநாட்டில் ஆராயப்பட்டது. (இ-3)

### நேர்முகப் பரீட்சை

சாவகச்சேரி, பெப். 26

எழுதுநர் சேவைக்கும் அதனோடிணைந்த சேவைக்குமான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 75 பேருக்கான நேர்முகப் பரீட்சைகள் இன்றும், நாளையும் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இயங்கும் யாழ். செயலகத்தில் நடைபெறவிருக்கின்றன.

இந்த நேர்முகப்பரீட்சைக்கு சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் சம்பந்தமான பத்திரத்தையும் நேர்முகப் பரீட்சைக்கான கடிதத்தையும் செயலக நிர்வாக உத்தியோகத்தரிடம் பெறுமாறு கோரப்பட்டுள்ளது. (இ-3)

## விமானத்தாக்குதல் நடத்த புலிகள் தயாராகின்றனர்

### கொழும்புப் பத்திரிகை தகவல்

கொழும்பு, பெப். 26

''அல்ட்ரா லைட்'' விமானங்களைக் கொண்டு தாக்குதல் நடத்த விடுதலைப் புலிகள் தயாராகி வருகின்றனர்.

இவ்வாறு புலனாய்வு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டதாக ''த ஐலண்ட்'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

தாக்குதலுக்கு விமானத்தைப் பயன்படுத்த விடுதலைப் புலிகள் இயக்கம் நீண்ட காலமாக முயற்சித்து வருவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் எப்போதாவது தாக்குதலுக்கு விமானத்தைப் பயன்படுத்தினால் அதனை அழிப்பதற்கு அரச படைகள் தயாராக இருக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார் என ''த ஐலண்ட்'' குறிப்பிட்டுள்ளது. (உ)

## தற்காலிக களஞ்சியம் மந்திகையில் அமைப்பு

சாவகச்சேரி, பெப். 26

கப்பல் மூலம் எடுத்து வரப்படும் உணவுப் பொருள்களை களஞ்சியப்படுத்த தற்காலிக களஞ்சியம் ஒன்றை மந்திகைப் பகுதியில் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். செயலகத்துக்கு கப்பல் மூலம் எடுத்து வரப்படும் நிவாரணப் பொருள்களை களஞ்சியப்படுத்த போதிய இடவசதியில்லாத காரணத்தால் யாழ். அரச அதிபரின் வேண்டுகோளையடுத்து தற்காலிக களஞ்சியம் அமைக்க அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் முன்வந்துள்ளது.

பருத்தித்துறை மந்திகையில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அலுவலகத்துக்கு அருகில் சில தினங்களில் இந்தக் களஞ்சியம் அமையவிருக்கிறது.

இந்தக் களஞ்சியம் அமைக்கத் தேவையான பொலித்தீன் மற்றும் உபகரணங்கள் நோர்வேயில் இருந்து கப்பல் மூலம் அந்த அமைப்பினால் எடுத்து வரப்பட்டுள்ளன.

சுமார் 600 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களை களஞ்சியப்படுத்தத்தக்கதாக இது அமையும்.

மேலும் இரண்டு தற்காலிக களஞ்சியங்களை அமைக்கத் தேவையான பொருள்கள் எடுத்துவரப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## தெற்கில் விரைவில் பூரண மின்வெட்டு

கொழும்பு, பெப். 24

நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சி காரணமாக ஸ்ரீலங்காவில் அடுத்த இரண்டொரு மாதங்களில் பூரண மின்வெட்டு வரும் என முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

நீர்த்தேக்கங்களில் வேகமாக நீர் மட்டம் குறைவதை தடுப்பதற்காக — முன்னேற்பாடாக — தினசரி மூன்று மணி நேரம் மின்சார விநியோகத்தை நிறுத்த வேண்டும் என மின்சாரப் பொறியியலாளர் சங்கம் பரிந்துரை செய்திருக்கின்றது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1996 02-26 காலை

- ★ 7-00 — ஆரம்பம்
- ★ 7-02 —மாவீரர் வணக்கம் தொடர்ந்து7-30 — வரை நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்.
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-45— அறிவிப்புகள் தொடர்ந்து 8 . 00 மணி வரை நீங்கள் கேட்டவை.

1996-02-26 இரவு

- ★ 8-00 — ஆரம்பம்
- ★ 8-02 — தளிர்கள்
- ★ 8-20 — கணப்பொழுது
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 அறிவிப்புகள் தொடர்ந்து 9 . 00 மணி வரை தாயகப் பாடல்கள்

## தமிழீழ வானொலி

1996-02-26

- ★ 5-00 — ஆரம்பம் சிந்தனைச் சிதறல்கள்
- ★ 5-02 — எழுச்சி கீதம்
- ★ 5-10 — அலையோசை
- ★ 5-30 — உணர்வின் ராகங்கள்
- ★ 6-00 — மண்ணின் குரல்
- ★ 6-10 — செய்திகள்
- ★ 6-15 — இசை நாடாப் பாடல்கள்
- ★ 6-30 —ஒலிபரப்பு நிறைவு

## கிளிநொச்சியில் தபால் சேவை

கிளிநொச்சிக்கான தென்னிலங்கை மற்றும் வெளிநாட்டுத் தபால்கள் வாரத்தில் மூன்று நாள்கள் வவுனியாவில் இருந்து எடுத்து வரப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன.

செவ்வாய், வியாழன், சனி ஆகிய தினங்களில் வவுனியா தபாலகத்தில் இருந்து இலங்கை செஞ்சிலுவைச் சங்க வவுனியா கிளையினரால் தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டு கிளிநொச்சி தபாலகத்தில் கையளிக்கப்படுகின்றன.

அதே தினங்களிலேயே கிளிநொச்சியில் உள்ள தென் பகுதி தபால் பொதிகளும் வவுனியாவுக்கு எடுத்து செல்லப்படுகின்றன. (உ-76)

## படம் எடுக்க அனுமதி மறுப்பு

கிளிவெட்டி குமரபுரத்தில் படையினர் நடத்திய வெறியாட்டத்தில் படுகாயமடைந்து திருகோணமலை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் 28 அப்பாவித் தமிழர்களைப் படம் எடுக்கச் சென்ற செய்தியாளர்களை அங்கு காவலுக்கு நின்ற பார்த்து காப்புப் படையினர் தடுத்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-ஜ)

### மந்திகை ஆஸ்பத்திரியில்

## மருத்துவபீட பரீட்சையை நடத்துவதற்கு முயற்சி

இன்று ஆரம்பமாகவிருந்து ஒத்திவைக்கப்பட்டுள்ள யாழ். மருத்துவபீட மாணவர்களுக்கான இறுதியாண்டு செய்முறைப் பரீட்சைகளை விரைவில் நடத்த துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் நடவடிக்கை எடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மந்திகை ஆஸ்பத்திரியில் இந்த செய்முறைப் பரீட்சையை நடத்துவதற்காக கொழும்பில் இருந்து வரவிருந்த 5 வைத்திய நிபுணர்களின் பயண ஏற்பாட்டில் ஏற்பட்ட தடை காரணமாக திட்டமிட்டபடி இந்த செய்முறைப் பரீட்சையை இன்று ஆரம்பிக்க முடியாது போயுள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் சாவகச்சேரியில் இருந்து கிளிநொச்சிக்கு சென்றுள்ள துணைவேந்தர் அங்கிருந்துசெஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலமாககொழும்புடன் தொடர்பு கொண்டு அந்த வைத்திய நிபுணர்களை வரவழைத்து, செய்முறைப் பரீட்சைகளை இங்கு நடத்த நடவடிக்கை எடுப்பார் என பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ3--7)

### பொலீஸாருக்கு

## தொல்லை கொடுக்கும் தொலைபேசித் தகவல்கள்!

கொழும்பு, பெப். 26

கொழும்பில் தங்கியிருக்கக் கூடிய வன்செயல் சந்தேக நபர்களையும், அவர்கள் தங்கியுள்ள வீடுகள் மற்றும் விடுதிகளையும் கண்டுபிடிப்பது பொலீஸாருக்கும் இராணுவத்துக்கும் பெரும் சோதனை தரும் விடயமாக மாறிவிட்டதாம்.

சந்தேகப் பேர்வழிகள், அவர்களின் வதிவிடங்கள் குறித்து தகவல் தருமாறு பொலீஸார் பொதுமக்களிடம் கேட்டிருந்தனர். தொலைபேசி மூலமும் தகவல் தரலாம் என அறிவித்திருந்தனர்.

இதன் பிரகாரம் பொலீஸாருக்கு நாளாந்தம் பெரும் எண்ணிக்கையில் தொலைபேசி அழைப்புகள் கிடைகின்றனவாம்.

ஆனால் அவை குறித்து விசாரிக்கச் சென்றால் தொலைபேசியில் தெரிவிக்கப்பட்ட விவரப்படி வதிவிடங்களோ, சந்தேகப் பேர்வழிகளோ இருப்பதில்லையாம்.

இதனால் தொலைபேசி மூலம் தகவல் அறிவது இப்போது பொலீஸாருக்குப் பெரும் தொல்லையாகிவிட்டது.

அதனால் அவர்கள் தொலைபேசி மூலம் கிடைக்கும் தகவல்கள் குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்கப் பின்னடிக்கிறார்கள்.

பொலீஸாரின் இந்த அசமந்தப் போக்குக் குறித்து பாதுகாப்பு அமைச்சின் உயர் மட்டத்துக்கு முறைப்பாடு வேறு செய்யப்பட்டும் உள்ளதாம்! (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணிகள் அனுமதி முறை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மோட்டைக்கு வந்து கஷ்டப்படுவதைத் தவிர்த்துக் கொள்வது நல்லது.

நொச்சிமோட்டையில் சோதனை முடிந்ததும் இளவயதினர் தாண்டிக்குளம் பாடசாலையில் வைத்து இராணுவ அதிகாரிகளினால் பரிசோதிக்கப்படுகின்றனர்.

25 வயதுக்கு உட்பட்டோர் 72மணித்தியாலங்கள் (மூன்று நாள்கள்) பாடசாலையில் வைத்திருப்பதாக அறிவித்துள்ளனர். அவர்களுடன் பெற்றோர், பாதுகாவலர் உடன் இருக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வைக்கப்பட்டுள்ளோருக்கு வழங்கப்படும் தங்குமிட, மலசலகூட, நீர்விநியோக வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டியது அவசியம். அதற்குப் பொருத்தமான நடவடிக்கை எடுத்துள்ளோம்.

தாண்டிக்குளத்தில் சோதனை முடிந்து, வேப்பங்குளம் தற்காலிக முகாமுக்கு மாற்றப்படும் வடபகுதிப் யபணிகள் முன்னுரிமை அடிப்படையில் — உரிய ஆவணங்கள் வைத்திருப்போர் — ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள முகாமுக்கு இராணுவத்தினரின் அனுமதி பெற அனுப்பப்படுகின்றனர்.

முன்னுரிமை முறை வருமாறு:-

1. மேலதிக வைத்திய சேவை பெற்றுக்கொள்ள வேண்டியவர்கள். இவர்கள் வவுனியா மாவட்ட வைத்திய அதிகாரியின் சிபார்சு பெற்றுக்கொள்ள வேண்டும். கொழும்பில் நிரந்தரமாகத் தங்கும் முகவரியும், பிரதான குடியிருப்பாளரின் பெயரும், அவரின் சம்மதமும் தேவை. அத்தோடு கொழும்பில் ஏற்கனவே பதிவு இல்லையாயின் பதிவு உள்ள ஒருவர் வவுனியாவுக்கு வந்து கூட்டிச் செல்ல வேண்டும். குறிப்பாக இளவயதினர் வைத்திய சேவை பெற்றுக்கொள்ள கொழும்புக்கு செல்ல வேண்டுமாயின் நிச்சயமாக கொழும்பில் பதிவு உள்ள ஒருவர் வந்து கூட்டிச்செல்வது அவசியம்.

2. கொழும்பில் கடமையாற்றுகின்ற அரச, கூட்டுத்தாபன ஊழியர்கள். இவர்களோடு தனியார் நிறுவனங்களில் கடமையாற்றுவோரும் தற்போது கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு கொழும்பில் நிரந்தரமாக வதிவதாக பதிவும், வேலை பார்க்கும் நிறுவனத்தால் குறித்த திகதியில் கடமையாற்றுகிறார் என்ற சான்றிதழும், அடையாள அட்டையும் தேவை.

ஒருவர் ஒரு நிறுவனத்தில் பணியாற்றி இளைப்பாறிய பின்னர் அல்லது அந்த வேலையை விட்ட பின்னர் அந்த நிறுவனத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை பயன்படுத்துகின்றனர் என்பதால் தான் அந்த நிறுவனங்களின் அவ்வேளையில் கடமையாற்றுகின்றார் என்ற சான்றிதழ் கோரப்படுகிது.

தெற்கே செல்லும் அரச ஊழியர், உத்தியோகஸ்தர்கள் கொழும்பு செல்வதாயிருந்தால் தமது உள்ளூர் திணைக்களத்தலைவரின் கடிதம், அடையாள அட்டை என்பவற்றுடன் தமது மாவட்ட அரச அதிபரின் சிபார்சுடன் வரவேண்டும்.

அவர்கள் வவுனியாவுக்கு வந்த பின்னர் வவுனியா செயலகத்துக்கு வந்து மேலதிக அரச அதிபரைச் சந்தித்தால் அவர் அதற்குரிய சான்றிதழைக் கொடுத்து அவரைக் கொழும்புக்கு அனுப்ப நடவடிக்கை எடுப்பார்.

அத்தகையோர் தென் பகுதியில் தங்கியுள்ள விலாசத்தை தர வேண்டும்.

தெற்கில் பதிவு உள்ள மக்கள் பதிவின் மூலப் பிரதியைக் சமர்ப்பிக்கவேண்டும். அத்தோடு பிரதான குடியிருப்பாளர் அல்லது அவரது பிரதிநிதி வவுனியாவுக்கு வந்து அவர்களைக் கூட்டிச்செல்லவேண்டும். பதிவு செய்யப்படும் இடங்களில் மாறுபாடு ஏற்படுவதால் கொழும்பில் இருந்து வந்து அழைத்துச் செல்ல வேண்டும் என இராணுவத்தினர் தெரிவிக்கின்றனர்.

3. உயர்கல்வி, நேர்முகப் பரீட்சை, வெளிநாடு செல்பவர்கள் ஆகியோர்.

இத்தகையோர் தமது ஆவணங்களை வவுனியா கச்சேரியில் மேலதிக அரச அதிபரிடம் ஒப்படைத்தால் அவரால் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும்.

இவர்களில் அநேகமானவர்கள் இளவயதினராக இருக்கின்ற காரணத்தால், பொறுப்புள்ள ஒருவர் அவர்களைக் கூட்டிச்செல்ல ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

அத்தோடு அவர்கள் தங்கி நிற்கும் இடத்தின் விலாசமும் தரப்படவேண்டும்.

நேர்முகப் பரீட்சைக்கு செல்பவர்கள் குறித்த திணைக்களத்தால் அவர்களுக்கு அனுப்பப்பட்ட அழைப்புக் கடிதத்தை சமர்ப்பிக்கவேண்டும்.

உயர்கல்விக்கு செல்வோரும் அதற்கான கடிதம் சமர்ப்பிக்கவேண்டும். நேரடியாக அந்தப் பல்கலைக்கழகத்தின் அல்லது உயர் கல்வி நிறுவனத்தின் பதிவாளருடன் தொடர்பு கொண்டு அவரிடம் இருந்து 'பக்ஸ்' செய்தி பெற்றுக் கொண்ட பின்னர் அப்பிரதியை இணைத்து சிபார்சு செய்து கொடுக்கிறோம். இதற்கான உதவியை எமது அலுவலகத்தில் பெறலாம்.

வெளிநாடு செல்பவர்கள் உரிய விஸா பெற்றிருக்க வேண்டும். அதற்குரிய டிக்கட் வைத்திருக்கவேண்டும்.

தென்பகுதியில் பதிவு இல்லாத சந்தர்ப்பங்களில் அவர்களின் தேவையைப் பொறுத்தும், சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களின் அடிப்படையிலும் தீர்மானங்கள் இராணுவ அதிகாரிகளினால் எடுக்கப்படுகின்றன.

மேற்கூறிய நடவடிக்கைகள் பொதுவாக பின்பற்றப்படினும், அனுமதிக்குரிய தீர்மானங்கள் ஒவ்வொருவரினதும் தகைமையை விசாரித்து, இராணுவ அதிகாரியினால் தீர்மானம் எடுக்கப்படுகின்றன.

எனவே ஒரேவிதமான முடிவுகள் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் எடுக்கப்படும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

வடபாதையின் வேலைகளை ஒன்றிணைக்கும் அதிகாரி என்ற ரீதியிலும், தாண்டிக்குளம், வேப்பங்குளம், ரயில் நிலைய தற்காலிக முகாம்களுக்கு பொறுப்பானவர் என்ற வகையிலும் வடபாதை பயணிகள் எதிர்நோக்கும் அசௌகரியம், தாமதம், அவர்களின் அத்தியாவசிய தேவை என்பவற்றை உரிய இடங்களுக்கு எடுத்துக்கூறி சில மாற்றங்களை அந்தந்தச் சமயங்களில் செய்துள்ளேன்.

இருப்பினும் இந்த ஏற்பாடுகள் சிவில் நிர்வாகத்துக்கு உட்படாத காரணத்தாலும் தீர்மானங்கள் பாதுகாப்பு அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படுவதனாலும் மக்கள் எதிர்பார்க்கும் வேகத்தில் அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவது இயலாத காரியமாக உள்ளது இருப்பினும் அவர்களின் கஷ்டங்கள் தொடர்ந்து வலியுறுத்தப்படுகின்றன.

மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய இடங்களில் பொலீஸ் நிலைய பதிவுகளின் பிரதிகள் கொடுக்கப்படாததால், அப்பகுதிகளில் இருந்து வவுனியா வரும் மக்கள் கஷ்டங்களை எதிர்நேக்குகிறார்கள். — என்று தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் நித்தியானந்தன்

இருபாலை கோப்பாயைப் பிறப்பிடமாகவும், இல-34, அத்தியடி புதுவீதியில் வசித்தவருமான சுப்பிரமணியம் நித்தியானந்தன் (19-02-1996) ஜேர்மனியில் காலமானார். அன்னார் சுப்பிரமணியம் (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்) — சிவபாக்கியம் தம்பதிகளின் அன்புப் புதல்வனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், கௌசல்யா. திவ்வியா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், இராஜேந்திரனின் மருமகனும், பரமானந்தன் (ஜேர்மனி), செல்வராணி, விஜயராணி, சிவானந்தன் (இத்தாலி), கிருபானந்தன் (ஆசிரியர், கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்),விவேகானந்தன் (ஆசிரியர், கோப்பாய் கந்தவேள் த. க. பாடசாலை), கருணாகரன் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புச் சகோதரரும், வசந்தகுமாரி, இலட்சுமணகுமார் (பல் வைத்தியர், கோப்பாய்), சண்முகராசா, செல்வராணி, வதனி, தாரணி, பூலோகரஞ்சிதம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் (24-02-1996) அன்று சனிக்கிழமை ஜேர்மனியில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
சுப்பிரமணியம் குடும்பத்தினர்
விதானையார் ஒழுங்கை,
இருபாலை,
கோப்பாய்.

தற்போதைய முகவரி:
C/o இ. சிவபாதசுந்தரம்,
கேரதீவு வீதி,
நாவற்குழி.

(40867)

## வடக்கிற்கு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

அனுப்பப்படுவதற்காக தயார் நிலையில் கொழும்பில் உள்ளதாகவும் —

பாடசாலைகள் அடுத்த வாரத்தில் இயங்க ஆரம்பித்[illegible] படும் எனவும் தெரியவருகிறது. (அ-3)

# இப்போது வலிகாமத்தில் கண்டிய நடனமும்,கூத்தும்!

சாவகச்சேரி, பெப். 26

தமிழர்களின் கூத்தும், இசையும், கலையும் செழித்தோங்கிய யாழ்ப்பாணத்தின் வலிகாமம் மண்ணில்—

இப்போது நாளாந்தம் சிங்களவர்களின் கண்டிய நடனங்களும், ''தோவில'' கூத்துகளும் அரங்கேறி வருகின்றன.

வலிகாமத்தை ஆக்கிரமித்த இராணுவச் சிப்பாய்களின் பொழுது போக்குக்காக அவர்களைக் குஷிப்படுத்துவதற்காக தெற்கிலிருந்து நாட்டிய மற்றும் கலைக் குழுக்கள் வடக்கே படை எடுத்து வருகின்றன!

யாழ்ப்பாணம், மாதகல், இளவாலை ஆகிய இடங்களில் உள்ள இராணுவ முகாம்களில் நடைபெற்ற சிங்களக் கலை நிகழ்ச்சிகளை 'ரூபவாஹினி' நேற்று ஒளிபரப்பியது.

கலை நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்த சிப்பாய்கள் சந்தோஷ மிகுதியால் தாமும் எழுந்து ஆடிப் பாடினர்.

மக்கள் இல்லாத வெறும் நிலத்தைப் பிடித்து வைத்துக் கொண்டு, லீவிலேனும் வீடு சென்று தமது உறவுகளைச் சந்திக்க முடியாமல் மனம் சலித்துத்துப் போயிருக்கும் சிப்பாய்களை—

கலை விருந்தின் மூலம் அதனை மறக்கச் செய்யும் அரசின் சாதுரியமான முயற்சி இது என்று அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

தமிழன் கலைகள் — இசையும் கூத்துமாக — வேரூன்றிப் போயிருந்த வலிகாமத்தில் கண்டிய நடனமா? - என்று கலைஞர்கள் கண்ணீர் வடிக்கிறார்கள். (அ)

## சந்திரிகாவின் அரசும் சனி மாற்றமும்...

கொழும்பு, பெப். 26

கொழும்பில் பாடசாலைகள் மூடப்பட்டதற்கும்—

நாட்டுக்கும் மக்களுக்கும் ஆசி வேண்டி பௌத்த பீடங்கம் நான்கும் யாகங்களும், பூசைகளும் நடத்துவதற்கும்-

தொடர்பு உண்டாம்!

இரண்டு கருமங்களுமே சோதிடம சம்பந்தப்பட்டவை என்று கொழும்பில் விடயமறிந்த வட்டாரங்கள் பேசிக் கொள்கின்றன.

இம் மாதம் 16 ஆம் திகதி சனி மாற்றம் நடைபெற்றது. சனி பகவான் கும்ப ராசியிலிருந்து மீன ராசிக்கு மாறினார்.

இந்த மாற்றம் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், அரசுக்கும் பாதகமான விளைவுகளைக் கொண்டு வரும் என்று சோதிடர்கள் கூறியிருந்தனர்.

அதனால் பாடசாலைகள் விடுதலைப் புலிகளின் அடுத்த இலக்காகக் கூடும் என்று அஞ்சியே தென்னிலங்கைப் பாடசாலைகள் இம் மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் மூடப்பட்டன.

மகாநாயக்க தேரர்களின் ஒத்துழைப்புடன் நாடாளாவிய ரீதியில், தொடர் பிரித் வைபவங்களும் மதநிகழ்ச்சிகளும், போதி பூசைகளும் இம்மாதம் 17ஆம்திகதி முதல் நடத்தப்பட்டு வருவதும்—

சனி மாற்றத்தின் விளைவுகளைத் தணிப்பதற்காகவே என்று சொல்லப்படுகிறது.

இந்த மத வைபவங்கள் யாவும் அரசாங்க ஆதரவிலேயே நடைபெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## கிண்ணியடி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தன.

இத்தாக்குதல்களில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டதாகவும்—

ஆறு படையினர் படுகாயமடைந்ததாகவும் —

காயமுற்ற சிப்பாய்கள் பொலன்னறுவை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் —

அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன

இத்தாக்குதல்கள் குறித்து மேலதிக தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை.

கடந்த வியாழக்கிழமை அதிகாலையும் கிண்ணியடி இராணுவ முகாம் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானது என்பது தெரிந்ததே. (உ-3-7)

## கிணறுகளில் தண்ணீர் வற்றுகிறது

தென்மராட்சி, பெப். 26

சாவகச்சேரி, ஆஸ்பத்திரியில் உள்ள இரண்டு கிணறுகளிலும் தண்ணீர் வற்றியுள்ளதால் நோயாளர்களின் சேவைகளுக்கு தண்ணீர் வழங்குவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தினமும் ஆறு தடவைகள், தலா முப்பது நிமிட நேரம் குழாய் மூலம் தண்ணீர் வழங்கப்படுகிறது.

நோயாளர்கள் தமது தேவை தவிர்ந்து அநாவசியமாக தண்ணீரை பாவிக்க வேண்டாம் என ஆஸ்பத்திரி நிர்வாக உத்தியோகத்தர் டாக்டர் (செல்வி) சிவபாதசுந்தரம் அறிவுறுத்தியுள்ளார்.

இன்னும் இரண்டு மாதங்களில் கிணறுகளில் தண்ணீர் இல்லாத நிலை ஏற்படலாமெனவும் அவர் தெரிவித்தார், (இ-117)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

### அமரர் முருகன் மாணிக்கம்

முத்தாக: 29 — 03 — 1932

வித்தாக: 27 — 01 — 1996

27-01-96 அன்று அமரரான முருகன் மாணிக்கம் அவர்களின் 31 ஆம் நாள் நினைவு தினமான இன்று அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்:
பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

விஸ்வகுல ஒழுங்கை,
பருத்தித்துறை.

(40308)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 26-02-96 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org